பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 11 திங்கட்கிழமை 28.10.2024 | அதிர்வு 88

# அநுர அரசு மீது மக்கள் அதிருப்தி

## இராதா தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

"ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் மீது 02 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## 'பார் லைசன்ஸ்' பெறவில்லை என்று

# சத்தியக் கடதாசியை உடன் வழங்க வேண்டும் சுமந்திரன்

### மொட்டுவின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் பார் லைசன்ஸ் பெற்றனர் என்று மக்கள் கூறுகின்றனர். இது அந்தக் கட்சிக்கே களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனைப் போக்குவதற்குச் சத்தியக் கடதாசியை உடனடியாக வழங்கி கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போது பார் லைசன்ஸ் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02 ▶

# கொழும்பு – யாழ்ப்பாணம் ரயில் சேவைகள் மீள ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு – யாழ்ப்பாணத்துக்கான நேரடி ரயில் சேவைகள் சுமார் 10 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து இன்று காலை 5.45 மணிக்குப் புறப்பட்ட ரயில் மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

யாழ்ப்பாணம் – கொழும்புக்கு இடையிலான ரயில் 02 ▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சத்தியக் கடதாசியை...

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரித்ததாவது:–

“பார் லைசன்ஸ்சோ – சாராயக் கடைகளோ யாருக்கும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கவில்லை எனச் சத்தியக் கடதாசி ஒன்றை அண்மையில் கொடுத்திருந்தேன். அதேபோல் என்னுடைய சக வேட்பாளர்கள் இதில் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இத்தகைய சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன்.

ஏனென்றால் தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற பார் லைசன்ஸ் விவகாரத்தில் யார், யார் இந்த பார் லைசன்ஸ்சை உண்மையில் பெற்றுக் கொடுத்தார்கள் என்று மக்களுக்குத் தெரிய வேண்டும்.

ஏனெனில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தாங்களாக தங்களுக்குத் தேவையானவர்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பியிருந்தார்கள. அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இவர்களை நாடாளுமன்றம் அனுப்பியது சாராயக் கடைகளை வாங்குவதற்காக அல்ல.

ஆகவே, யார் யார் வாங்கினார்கள் என்பது வாக்களித்த மக்களுக்குக் கட்டாயம் தெரிய வேண்டும். ஆனால், இந்த உண்மையை வெளிப்படுத்த வேண்டிய புதிய ஆட்சியாளர்கள் கூட அதனை வெளிப்படுத்தத் தயங்குகின்ற நிலைமைதான் உள்ளது.

ஆனாலும், இவர்கள் ஏன் தயங்குகின்றார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. இதனாலேயே இந்தத் தேர்தலில் போட்டியிடும் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து வேட்பாளர்களும் பார் லைசன்ஸ் வாங்கவில்லை எனச் சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

ஆனாலும், இதுவரைக்கும் எவரும் அப்படியான சத்தியக் கடதாசியை கொடுத்ததாகக் காணவில்லை. இவ்வாறான நிலைமையில் ஒவ்வொரு நாளும் நாங்கள் பார்க்கின்றபோது சாரயக் கடை சம்பந்தமாக முன்னாள் எம்.பி. சுமந்திரன் ஊடகங்களில் கதைத்துக் கொண்டிருக்கின்றார்.

உண்மையில் எங்களுக்கு அவர் ஒரு முன்மாதிரியான அரசியல்வாதி. அவரைப் பார்த்துத்தான் நாங்களும் சில விடயங்களை அதிலும் அவருடைய உரைகளில்தான் நாங்களும் சில அரசியல் விடயங்களைப் படித்துக் கொள்கின்றோம்.

ஆகவே, அவர் எங்களுக்கு எல்லாம் ஒரு முன்மாதிரிதான். ஏனெனில் நாங்கள் இப்போதுதான் புதிதாக அரசியலுக்குள் வந்திருக்கின்றோம். அவர் எங்களை விட மூத்த கௌரவமான அரசியல்வாதி. அதனால் அவரைப் பெரும் மரியாதையோடு பார்க்கின்றோம்.

எனவே, நாம் கேட்டது போல அவர் ஒரு முன்மாதிரியாக ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும். ஏனெனில் சாராயக் கடை சம்பந்தமாக உண்மை தெரிய வேண்டும் என்று ஜனாதிபதியிடமும் சென்று கதைத்திருந்தவர்.

அவ்வாறு முதலில் அவரே ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுத்து அவரது கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் சத்தியக் கடதாசியைக் கொடுக்கச் சொல்லிக் கேட்கலாம். ஏனெனில் அவருடன் அரசியல் செய்பவர்கள்தான் இம்முறை அந்தக் கட்சியில் நாடாளுமன்றத் தேர்தலும் கேட்கின்றார்கள். ஆகவேதான் இதனை முன்மாதிரியாகச் செய்யுங்கள் என சுமந்திரனை மரியாதையுடன் கேட்கின்றோம்.

ஏனெனில் வாக்களித்த மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும். அதாவது பார் லைசன்ஸ் வாங்கினார்களா? இல்லையா? என்பது தெரிய வேண்டும். அதைவிடுத்து யாரையும் சேறு பூசுவது எங்களது நோக்கமும் அல்ல.

இவ்வாறு சத்தியக் கடதாசியை வெளிப்படுத்தியதன் பின்னர் யாரும் பார் லைசன்ஸ் வாங்கினார்களா? இல்லையா? என்று உண்மை தெரிய வந்ததன் பின்னர் மக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

அதனால்தான் சுமந்திரனை மிக மரியாதையுடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால் உங்கள் கட்சியை களங்கம் இல்லாத கட்சியாகக் காட்ட வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கின்றபடியால் நீங்கள் இதனைச் செய்யுங்கள்.

நாங்கள் கிராமங்கள் தோறும் மக்களிடம் செல்கின்றபோது தமிழரசுக் கட்சி ஆட்கள் பார் லைசன்ஸ் வாங்கியதாகத்தான் சொல்கின்றார்கள்.

உங்கள் கட்சிக்கு ஏற்பட்டுள்ள இந்தக் களங்கத்தைப் போக்குவதற்கான ஒரேயொரு நபர் நீங்கள்தான். உங்களால்தான் இந்தக் களங்கத்தைப் போக்க முடியும். ஆகவே, சத்தியக் கடதாசியாகக் கொடுத்து முன்மாதிரியாகச் செயற்படுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

---

### கொழும்பு - யாழ்ப்பாணம்...

சேவைகள் உள்நாட்டுப் போர் காரணமாக வவுனியாவுடன் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

போர் மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 2014ஆம் ஆண்டு முதல் கொழும்பு – யாழ்ப்பாணம் ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

அந்நிலையில், கடந்த 2023ஆம் ஆண்டு வவுனியாவுக்கும் அனுராத புரத்துக்கும் இடைப்பட்ட ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் காரணமாகக் கொழும்பில் இருந்து புறப்படும் ரயில்கள் அனுராதபுரத்துடனும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் ரயில்கள் வவுனியாவுடனும் சேவைகளை மட்டுப்படுத்தின.

புனரமைப்புப் பணிகளின் முடிவடைந்து பின்னர் மீண்டும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்நிலையில், இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அனுராதபுரம் மற்றும் மாகோ இடையிலான ரயில் பாதை புனரமைப்புப் பணிக்காகக் கொழும்பில் இருந்து புறப்படும் ரயில்கள் மாகோவுடனும் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் ரயில்கள் அநுராதபுரத்துடனும் தமது சேவைகளை மட்டுப்படுத்தின.

அநுராதபுரம் – மாகோ ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கொழும்பு – யாழ்ப்பாணம் ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுத்த போதிலும் , ரயில் சமிக்சை விளக்குகள் சீர்த்திருத்தப் பணிகள் உள்ளிட்ட தொழில்நுட்ப ரீதியான வேலைகள் பூர்த்தியாகமையால் சேவைகள் ஆரம்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், இன்று திங்கட்கிழமை முதல் கொழும்பு – யாழ்ப்பாணம் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

---

### அநுர அரசு மீது...

மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதை எல்பிட்டிய சபைத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன. இதே நிலை நாடாளுமன்றத் தேர்தலிலும் ஏற்படும்.”

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“பொதுவாக இலங்கை அரசியலில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து அதில் வெற்றி பெறும் ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சி அடுத்து வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் பாரியளவில் வெற்றி பெறுவதை நாம் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்பு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைத் தேசிய மக்கள் சக்திக்குப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதற்குக் காரணம் இந்த ஜனாதிபதியின் மீதும், அரசின் மீதும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. ஜனாதிபதி அநுர எதிர்க்கட்சியில் இருந்த போது தான் பதவிக்கு வந்தால் 48 மணித்தியாலங்களில் பல மாற்றங்கள் செய்வதாகக் கூறினார்.

பல அதிசயங்கள் செய்யக்கூடிய திறமை தன்னிடமும் தனது குழுவினரிடமும் இருப்பதாக அவர் கூறினார். ஆனால், இப்போது நான் மந்திரவாதியோ, தந்திரவாதியோ இல்லை என அவர் கூறுகின்றார். இதுதான் உண்மையான நிலைமை.

பதவிக்கு வருவதற்கு முன்பும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், நாட்காலியில் அமர்ந்தவுடன் தான் கூறியதை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அப்போதுதான் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, நிதானமாக சிந்தித்துச் செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம் மக்களிடம் கூற வேண்டும். அதனையே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், ஏனைய அங்கத்தவர்களும் செய்கின்றார்கள்.

இதனடிப்படையில் நாங்கள் எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிகளைக் கொண்டு புதிய அரசை அமைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.” – என்றுள்ளது.



பாராளுமன்ற தேர்தல் 2024
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சிறீதரன்
சுமந்திரன்
சுகிர்தன்
சயந்தன்
கிருஸ்ணவேணி
பிரகாஷ்
ஆர்னோல்ட்
சுரேகா
இளங்கோவன்
அடையாளம் மாறாத
அரசியல் மாற்றம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

# திகாமடுல்ல பிரதிநிதித்துவத்தை தாரைவார்க்க திரைமறைவில் சதி!

## வேட்பாளர் சப்ராஸ் மன்சூர் விசனம்

(எம்.வை. அமீர்)

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட திகாமடுல்ல மாவட்டத்தில் அவர்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை கபளீகரம் செய்ய திரைமறைவில் திட்டங்கள் தீட்டப்பட்டுகின்றன. முஸ்லிம் சகோதரர்களும் இதற்குத் துணை போகின்றனர். உண்மையை உணர்ந்து சிறுபான்மை முஸ்லிம் மற்றும் தமிழர்களுக்கேயான பிரதிநிதித்துவத்தை பெற வழிவிட வேண்டும்.

புதிய ஜனநாயக முன்னனியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் சப்ராஸ் மன்சூர் வேண்டுகோள் விடுத்தார்.

திகாமடுல்லவில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு நேற்று (27) கல்முனையில் இடம்பெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்தபோதே சப்ராஸ் மன்சூர் மேற்படி கருத்துக்களை வெளியிட்டார்.

நிறைவேறாத உணர்வுபூர்வ பேச்சுக்களுக்கும் முகநூல் எழுத்தாளர்களின் பசப்பு வார்த்தைகளுக்கும் சிலர் மண்டியிட்டிருப்பது எதிர்காலத்தில் மிகுந்த பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் 1915 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம்கள் பல்வேறு நெருக்குதல்களுக்கு உள்ளாகினர். அப்போது முஸ்லிம்களுக்காக தமிழ் தலைவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரே குரல் கொடுத்தனர். பிற்காலத்தில் மர்ஹூம் அஷ்ரப்பின் வருகைக்குப் பின்னர்



முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய திராணியுள்ள ஒரு தலைவனை கல்முனை இந்த நாட்டுக்கு அர்ப்பணித்தது. அந்த அஷ்ரப் என்கின்ற மாமனிதனின் முயச்சியாலேயே தற்போதைய ஜனாதிபதியின் கட்சி உள்ளிட்ட சிறு கட்சிகள் அரசியலுக்கு வந்தன.

அன்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவில் 12.5 வீத என்ற வெட்டுப்புள்ளியை 5 வீதமாக மாற்றுவதற்கு அஷ்ரப் எடுத்த முயச்சியால் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் திகாமடுல்லவில் அவர் சார்ந்த சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை இலக்குவைத்து வேட்பாளர்களை நிறுத்தி அதிலும் முதன்மை வேட்பாளரான வசந்தவுக்கு ஒரு தெரிவு வாக்கைப் பெற முயச்சிப்பது சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை பறித்தெடுக்கும் செயல்.

மர்ஹூம் அஷ்ரப், முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்க கட்சியை உருவாக்கி செயற்பட்ட போது, பின்னர் வந்த றவூப் ஹக்கீம், றிஷாத் பதியூதீன் மற்றும் சுமந்திரன் உள்ளிட்டோர் சிறுபான்மையினரின் அபிலாசைகளைப் புறம் தள்ளி அவர்களது ஆசைகளை அடைந்து வருகின்றனர். இவர்களில் சமூக விரோத செயற்பாடுகளின் காரணமாகவே முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவிடமிருந்து பிரிந்து தேசிய காங்கிரஸை உருவாக்கி சமூகம் சார்ந்த பணிகளை முன்னெடுக்கிறோம்.

சிலர் தங்களது அரசியல் நலன்களுக்காக, பிட்டும் தேங்காய் பூவுமாக இருந்த கல்முனை தமிழ் முஸ்லிம் சமூகத்தினரை விரோதிகளாக்கி வைத்துள்ளனர். சிலர் கல்முனை தமிழர்களை பங்களாதேசில் இருந்து வந்தவர்களைப் போன்று பார்க்கின்றனர். நாங்கள் எல்லா சமூகத்தினருடனும் இணைந்தே வாழவேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது 86000 இற்கு மேற்பட்ட வாக்குகளை புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னம் பெற்றது. அந்த வாக்குகளுடன் இன்னும் சற்று அதிகமான வாக்குகளை கட்சி பெறுமாக இருந்தால் முழுமையாக மூன்று பிரதிநிதிகளைப் பெறக்கூடிய வாய்ப்பு புதிய ஜனநாயக முன்னணிகே உள்ளது.

திகமடுல்லவில் இன விகிதாசார அடிப்படையில் முஸ்லிம்கள்-04 ஆசனங்களையும் சிங்களவர்கள்-02ஆசனங்களையும் தமிழர்கள்-01 ஆசனத்தையும் பெறவேண்டும். வெற்றுக் கோஷங்களுக்கு அடிபணிந்து விடாது சிந்தித்து தங்களது வாக்குகளை பிரயோகிக்குமாரும் கேட்டுக்கொள்கிறேன்.- என்றார்.



## அட்டாளைச்சேனையில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் திறப்பு

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனையில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் தேர்தல் அலுவலகம் வேட்பாளர் ரமீஸ் முஹைதீன் தலைமையில் நேற்று (27) திறந்து வைக்கப்பட்டது.

இதில் அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

# எமது மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு மாணவர்களில் முதலீடு செய்துள்ளேன்

## வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டு

**(த.சுபேசன்)**

எமது மாவட்டத்தை முன்னேற்ற மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் மாணவர்களில் முதலீடு செய்திருக்கிறேன் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற பிரசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் வேலைச் சந்தைக்குப் பொருத்தமான இளைஞர் யுவதிகளை உருவாக்கும் நோக்கில் எனது சொந்த நிதியை முதலீடு செய்துள்ளேன்.

அதாவது யாழ். மாவட்டத்தின் எட்டு பிரதேசங்களில் என் கனவு யாழ் அக்கடமியை நிறுவி ஒவ்வொரு பிரதேசத்திலும் முதற்கட்டமாக 1200மாணவர்களை உள்வாங்கி இலவச



தொழில்நுட்ப கல்வியை வழங்கி வருகிறேன்.

இன்று பெருமளவான இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் சென்று அங்கு வேலை செய்ய முடியாமல் மீண்டும் நாடு திரும்புகின்றனர்.வெளிநாடுகளில் தேவைப்படும் கல்வித் தகைமை எமது இளைஞர், யுவதிகளிடம் இல்லை. அதுவே அவர்கள் மீண்டும் நாடு திரும்ப காரணமாக அமைகின்றது.

எனவேதான் நாம் தற்போது தொழில்நுட்ப கல்வியை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறோம்.

25 லட்சம் ரூபா பெறுமதியான கற்கையை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கி வருகிறோம்.

அடுத்த பத்து வருடங்களில் யாழ். மாவட்டத்தில் இருந்து 25 ஆயிரம் மாணவர்களை சர்வதேச வேலைச் சந்தைக்கு தகுதியானவர்களாக உருவாக்குவதே எனது இலக்காக உள்ளது.

இவ்வாறு உருவாக்கப்படும் மாணவர்கள் புலம்பெயர வேண்டிய தேவை ஏற்படாது. சொந்த நாட்டில் இருந்து கொண்டே வெளிநாட்டு நிறுவனங்களில் பணி புரிந்து டொலரில் சம்பாதிக்கக் கூடிய நிலை காணப்படும்.

இதனூடாக எமது மாவட்டம் வளர்ச்சி காண்பதுடன், இளைஞர், யுவதிகள் புலம்பெயர்வதும் கட்டுக்குள் கொண்டு வரப்படும்.- என்றார்.

# வேறுபாடுகள் எதனையும் காட்டாது அனைவருக்கும் சேவையாற்றுவேன்

## வேட்பாளர் அஸ்ரப் தாஹிர் தெரிவிப்பு

**(எம். எப். றிபாஸ்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு துரோகம் செய்த எவரும் அரசியலில் நீண்ட நாள்கள் பயணிப்பதில்லை. நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் முடிவுகள் உண்மையை உணர்த்தும். இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நான் சேவையாற்றுவேன்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் போட்டியிடும் ஏழாம் இலக்க பிரதம வேட்பாளர் அஸ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு



கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்,

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். விஷேடமாக தமிழ், சிங்கள மக்களுடன் நல்லுறவைக் கட்டி எழுப்பும் ஒரு கட்சியாக எமது கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராக இருந்து கொண்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள மூவின மக்களுக்கும் முடியுமான பணிகளை செய்து இருக்கின்றேன்.

அந்த வகையில் இந்த மாவட்டத்தில் வாழும் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவனாக இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். எனது வெற்றிக்காக நீங்கள் எல்லோரும் உழைக்க வேண்டும். அதன் மூலம் இன, மத, வேறுபாடுகளுக்கப்பால் சேவையாற்ற இறைவன் துணைபுரிய வேண்டும்.- என்றார்.

Gsm GUNAAM SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# திருத்த முடியாத தெற்கு

நாய் வாலை நிமிர்த்த முடியாது. சிங்கள பேரினவாத மேலாதிக்க சக்திகளும் அத்தகையவைதான். அவற்றின் இனவாத போக்கு அத்தரப்புகளின் இரத்தத்தில் ஊறியது. அதிலிருந்து அவை விடுபட மாட்டா.

தென்னிலங்கையின் ஆட்சி பீடத்திற்கு எந்தத் தரப்பு வந்தாலும், அது அதன் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கப் போக்கிலிருந்து மாறவே மாட்டாது. ஏனென்றால், மாறி மாறி அதிகாரத்துக்கு வருகின்ற சிங்களத் தரப்புகள் எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்.

''வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எங்களுடைய நாட்டுப் பிரச்சுனையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்கள் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயல்படுகின்றன.'' - இப்படி புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்கா யாழ் வந்து இங்கு வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

சாத்தான் வேதம் ஓதுவது போல, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் வந்து அவர் இப்படித் தத்துவம் பிளக்கின்றார்.

வெளிநாட்டு தலையீட்டின் கீழ் தமிழர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்குமா என்பது வேறு விடயம். ஆனால் குற்றம் சுமத்தப்பட்ட தரப்பிடம் இருந்து, அவர்களே நீதிபதிகளாக இருந்து தமிழர்களுக்கு நீதி வழங்குவார்கள் என்று நம்புவது முட்டாள்தனம். அந்த முட்டாள்தனத்தில் தங்கி இருப்பதிலும் பார்க்க கிடைக்குமோ கிடைக்காது என்றாலும் சர்வதேசத்திடம் நீதியை எதிர்பார்ப்பதில் சற்று நியாயம் இருக்க முடியும் என்பதை பிமல் ரத்நாயக்காவிடம் கூறி வைக்க விரும்புகிறோம்.

பௌத்த - சிங்கள இன வெறி மேலாதிக்கம் மிக்க இந்த நாட்டின் தலைமைத்துவத்திடம் இருந்து தமிழ் தேசிய மக்களுக்கு இலங்கை தீவில் நீதி, நியாயம் கிடைக்கும் என்று கருதுவதற்கு சற்றேனும் நம்பிக்கை இருக்குமானால் இந்த மக்கள் சர்வதேசத்தின் கதவைத் தட்டி இருக்க மாட்டார்கள்.

சர்வதேசத்திடமிருந்து நீதியை ஒருபோதும் எதிர்பார்க்காதீர்கள் என்று வேதமோதும் பிமல் ரத்நாயக்கா போன்றவர்களிடம் இந்த மண்ணில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சிங்கள - பௌத்த இன வெறி மேலாதிக்கம் நிலவும் இந்த இலங்கைத் தீவில் நீதி நியாயம் கிடைக்கும் என்று உறுதி கூற முடியுமா என்பதை நெஞ்சைத் தொட்டுப் பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதி, நியாயமான விசாரணை ஒன்றை நடத்துவோம் என்று உள்நாட்டில் பகிரங்கமாக அறிவிக்கக் கூட திராணியற்று, பேரினவாத சக்திக்குள் மூழ்கி இருக்கும் பிமல் ரத்நாயக்கா போன்றவர்கள் நீதி, நியாயம் பற்றியும் சர்வதேச ஒழுங்குமுறைகள் பற்றியும் பேசுவது வேடிக்கையானது.

70 களின் முற்பகுதியிலும் 80களின் பிற்பகுதியில் அவரது ஜே.வி.பி. இயக்கம் மேற்கொண்ட நாசகார அழிவு நடவடிக்கைகளின் போது இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு இன்னும் நீதி பெற முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த வேளையில் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக இலங்கை நாட்டுக்குள் நீதி பெற முடியாது என்பதை உணர்ந்து, அந்த விடயங்களை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்துக்கு அப்போதைய எதிரணிப் பிரமுகராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ எடுத்துச் சென்றார் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

அப்படி உள்நாட்டில் நீதி கிடைக்காது என்று தெரிந்து ஜெனிவாவுக்கு விடயத்தை எடுத்துச் சென்ற மஹிந்த ராஜபக்ஷதான் பின்னர்தாம் ஆட்சி பீடம் ஏறியதும் உள்நாட்டுக்குள் நீதி என்று தத்துவம் பிளந்தார்.

அதே தத்துவத்தை தான் இப்போது தாங்கள் ஆட்சி பீடம் ஏறியதும் தேசிய மக்கள் சக்தியினர் கூறுகின்றனர்.

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் அநீதி என்பது இலங்கை தேசத்தில் இரண்டு தரப்புகளுக்கு இடையிலான பிணக்கின் விளைவாக ஏற்பட்டது அல்ல.

அதையும் தாண்டி, இலங்கையின் அரசு கட்டமைப்பு அதன் பௌத்த - சிங்கள மேலாதிக்க வெறிப்போக்குக் காரணமாக தமிழினத்தின் மீது பேரினவாத சிந்தனையில் இழைத்த கொடூரங்கள் ஆகும். அதாவது அரசு மக்கள் மீது இழைத்த கொடூரத்துக்கு அந்த அரசிடமே நீதி கேட்பது என்பது முட்டாள்தனமானது. பொருத்தமற்றது. காரிய சாத்தியமற்றது. நடைமுறைக்கு ஒவ்வாதது.

குற்றம் இழைத்த தரப்பே பிணக்குக்கு நீதி செய்யும் என்று எதிர்பார்ப்பது அறிவிலித்தனம்.

அதனால்தான் தமிழர்கள் சர்வதேசத்துடன் நீதி கேட்டு செல்கின்றார்கள்.

சரியோ பிழையோ, காரிய சாத்தியமோ அற்றதோ, பலனளிக்குமோ இல்லையோ, தமிழர் தரப்பு தமக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு மூன்றாம் தரப்பிடம் இருந்துதான் நீதியைப் பெற முடியும். அதற்குத்தான் வாய்ப்புண்டு. குறைந்தபட்சம் குற்றமிழைத்த தரப்பை சர்வதேசத்தின் முன்னால் அம்பலப்படுத்தவாவது அது ஒன்றே தமிழருக்குரிய ஒரே வாய்ப்பு. அதை அவர்கள் விட்டுக் கொடுக்க முடியாது. அதிலிருந்து விலகவும் முடியாது.

# திகாமடுல்லவில் இரண்டு ஆசனங்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு!

## வேட்பாளர் றிஸ்லி முஸ்தபா தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கான மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்று அந்தக் கட்சியின் இளைஞர் அமைப்பாளரும், கல்முனை பிரதேச வேட்பாளருமான றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் தேர்தல் அலுவலகங்களைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்.

கல்முனையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நான் போட்டியிடுகின்றேன். இந்தப் பிரதேசத்தில் 35 ஆயிரத்துக்கு மேல் வாக்குகள் உள்ளன. அக்கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் பெறுகின்ற வேட்பாளருக்கு ஒரு உறுப்பினராக தெரிவாகின்ற வாய்ப்பு இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்கள் பெறக் கூடிய வாய்ப்பு அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அதிகரித்துச் செல்கின்றது. இச்



சந்தர்ப்பத்தில் இப்பிரதேச மக்கள் தங்களது வாக்குகளை சிந்தித்து வழங்குவார்களாகயிருந்தால் தமக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மக்கள் செல்வாக்கை இழந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கும் கட்சிகளுக்கு வாக்களித்து அவ்வாறான வாக்குகளை வீணடித்து விடாமல் நேர்மையாக அரசியல் செய்து மக்கள் நம்பிக்கையை பெற்றவர்களுக்கு தமது வாக்குகளை அளிப்பதற்கு வாக்காளர்கள் முன்வர வேண்டும்.

வெறுமனே நாடாளுமன்ற கதிரைகளை சூடாக்கி விட்டு மக்களுக்கு ஆக்க பூர்வமான எதையும் செய்யாத கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து நமக்கு நாமே சேறு பூசிக் கொள்ளும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் மக்கள் செல்வாக்குடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவு பெருகி வருகின்ற இந்த நிலையில் கல்முனை பிரதேச மக்களும் இதனோடு இணைந்து நமக்குச் சாத்தியமான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வாக்குகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் திறமையான நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களம் இறக்கப்பட்டிருக்கின்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றியை உறுதி செய்வதோடு எட்டாம் இலக்க வேட்பாளரான எனக்கும் மயில் சின்னத்துக்கும் வாக்களித்து நமக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.- என்றார்.



# நாடாளுமன்றில் சுகபோகம் அனுபவிக்கும் சிலருக்கு இந்தத் தேர்தல் பாடம் புகட்டும்!

## வேட்பாளர் சிராஸ் மீராசாஹீப் தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை பெறக் கூடிய நிலைக்கு முன்னேறி வருவதாக திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூன்றாம் இலக்க வேட்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சிராஸ் மீராசாஹீப் நேற்றுத் தெரிவித்தார்.

கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் சாய்ந்தமருதில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முதல்வராகவிருந்து மக்கள் பணி எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு உதாரணமாக பிரதேச வேறுபாடுகளின்றி மக்களுக்கு தேவையான விடயங்களை இனம் கண்டு சேவையாற்றியவன் என்ற வகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் நானும் ஒரு வேட்பாளராக களமிறங்கியுள்ளேன். நாடாளுமன்றத்துக்குப் புதுமுக



வேட்பாளராக இருந்தாலும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுமாக இருந்தால் ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக நான் செயல்பட திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

மக்கள் வாக்குகளைப் பெற்று சுக போகம் அனுபவிக்கின்றவர்களுக்கு மத்தியிலிருந்து அவர்களது வாக்குகளால் மக்களுக்கு சேவை செய்யக் கூடிய ஒருவனாக இந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறுமானால் செய்து காட்ட தயாராகவுள்ளேன். ஊழலற்ற நேர்மையான ஒருவனாக இந்த அரசியல் களத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்ற நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கின்றவனாகவும் மக்களது தேவைகளை இனம் கண்டு அபிவிருத்திகளின் பால் நமது பிரதேசத்தை ஈர்க்கின்ற ஒருவனாகவும் சர்வதேசம் தொடக்கம் தேசிய ரீதியில் பல்வேறு தரப்பினருடனும் தொடர்புகளை வைத்துள்ள என்னால் பல விடயங்களை மக்களுக்காக செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அந்த வகையில் சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் திறமையான நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களமிறக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றியை உறுதி செய்வதோடு மூன்றாம் இலக்க வேட்பாளரான எனக்கும் மரச் சின்னத்துக்கும் வாக்களித்து நமக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.- என்றார்.

# பொத்துவில் கோமாரி மற்றும் மல்வத்தை பிரதேசங்களில் தனியான பிரதேச செயலகம்!

## உருவாகும் என்கிறார் வேட்பாளர் ஜெயசிறில்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை மறுக்கப்பட்டுவந்த பொத்துவில், கோமாரி மற்றும் மல்வத்தையில் பிரதேச செயலகங்களை நிச்சயமாக உருவாக்குவேன். மேலும் அம்பாறை மாவட்டத்தில் சகல தமிழ் பிரதேசங்களும் அபிவிருத்தி காணும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் காரைதீவு முன்னாள் திசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார் .

காரைதீவில் அமைந்துள்ள அம்பாறை ஊடக மையத்தில் இன்று (28) திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பாதுகாக்கும் ஒரே கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி ஒன்றுதான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

இன்று எம் மீது பல கட்சிகளும் விமர்சனம் செய்கின்றார்கள். அதற்கு




காரணமே அவர்கள் பயந்து விட்டார்கள் என்பதுதான்.

இந்த முறை யாருமே எதிர்பார்க்காத வகையிலே 60 ஆயிரம் வாக்குகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி ஒரு ஆசனத்தை பெறுகின்றது என்பதை இன்றே தெரிவிக்கின்றேன்.

கடந்த கால அரச பயங்கரவாதம் ஏனைய இனங்களின் அடக்குமுறை என்பவற்றை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுப்பேன்.

ஊழலற்ற அரசியலை நடத்த வருகைதந்த தோழர் அநுரவிடம் பேசி எம்முடைய பிரச்சினைகள் யாவும் தீர்த்து வைக்கப்படும்.

29 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 39,000 மக்களையும் கொண்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நிச்சயம் கணக்காளர் நியமிக்கப்பட்டு அந்தஸ்து வழங்கப்படும். இதில் மாற்று கருத்துக்கள் இடமில்லை.

அது மாத்திரம் அல்ல பிரபலமான திருக்கோவில் ஆதார வைத்திய சாலையின் அவல நிலையை பார்த்திருப்பீர்கள். அங்கு அதனை பூரணமாக நடைமுறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன்.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்கள் இனிமேல் தான் ஒளி பெறும் என்பதை ஆணித்தரமாக கூறுகின்றேன்.- என்றார்.





# வரலாற்றை உரியவாறு மக்களுக்கு புரிய வைப்பது எழுத்தாளரது கடமை

## லண்டனில் டாக்டர் ரவிமோகன் உரை

வரலாற்றை உரிய முறையில் மக்களிடம் எடுத்துச் சென்று இலகுவாக புரிய வைப்பது எழுத்தாளர்களது கடமை என்று டாக்டர் வே. ரவிமோகன் தெரிவித்தார்.

லண்டனில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியீட்டில் ‘தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்’ நூலின் அறிமுகவுரையை டாக்டர்.வே. ரவி மோகன் ஆற்றினார்.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியில் போராடும் இனங்களின் வரலாற்றை, தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து ஐங்கரன் விக்கினேஸ்வரா பல நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணயம் நோக்கிய தேசியப் போராட்டத்தில் ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய நூல்கள் எதிர்கால சந்ததியினருக்கு வரப்பிரசாதமாக அமையும்.– என்றார்.



இந்நிகழ்வினை பிபிசி விக்கி விக்கினராஜா தொகுத்து வழங்கினார். இவ்வெளியீட்டு விழாவில் சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள் ஆசியுரையை வழங்கினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை லண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடினார்கள். நிகழ்வின் சிறப்பம்சமாக நாட்டிய கலா நிபுணா ஷோபிதா ஜெயசங்கரின் பரத கலாலயம் நடனப் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

ஈழத்தின் மூத்த ஆவணக் காப்பாளர் பத்மநாப ஐயர், வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை வழங்கினர்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர் வே. ரவி மோகன் ஆற்றினார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கோவிலூர் செல்வராஜன் ஆற்றினார். ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை நா. சபேசன் சார்பாக ஜனகன் உரை ஆற்றினார்.

அத்துடன் இந்த நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி மாதவி சிவலீலன் வழங்கினார். அத்துடன் டாக்டர் சி.ஜெயசங்கர், ஜனகன் பாலசுந்தரம்பிள்ளை, சத்யேந்திரா, ரூபராஜ், வரதீஸ்வரன் கனகசுந்தரம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந்த நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.


EVEREST
FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அலுவலகம் களுவாஞ்சிக்குடியில்!

(பழுவூரான்)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியால் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகத் தேர்தல் அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அதன் ஒரு அங்கமாக கட்சியின் இளைஞர் அணி செயலாளரும் தொழிலதிபருமான எஸ். சுரேஷ்குமார் தலைமையில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதிக்கான பிரதான தேர்தல் பிரச்சார அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரமான சிவனேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நாடா வெட்டி அலுவலகத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அத்தோடு இந்த நிகழ்வில் கட்சியின் தேசிய அமைப்பாளர் தஜீவரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு தேர்தல் பரப்புரை அலுவலகத்தைத் திறந்து வைத்திருந்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள், கிராமிய மட்ட அமைப்புக்களின் நிர்வாகிகள், ஊர்த் தலைவர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.கொட்டும் மழையையும் பொருட்படுத் தாமல் அதிகளவிலான ஆதரவாளர்கள் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.





# காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் நிலைய சிறாருடன் ஐகோனிக் யூத்ஸ் அமைப்பு

(றிஸ்வான் சாலிஹு)

கிழக்கிலங்கையில் சகல துறையிலும் பிரகாசித்து வரும் ஐகோனிக் யூத்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பு, ஏழை மக்களின் கண்ணீர் துடைக்கவும், மூவினத்தையும் சேர்ந்த வறிய மாணவர்களை இணம் கண்டு அவர்கள் வறுமையால் கல்வியை இடைவிடாக்கூடாது என்பதற்காகவும் முடியுமான வரை கல்வி செயற்பாட்டுக்கான உதவிகளை வழங்கி வருகிறது.

அத்துடன் நோயுற்று இருக்கும் ஏழை மக்களுக்கு மருத்துவ தேவைகளை நிறைவேற்றல், பெற்றோரை இழந்து அநாதைகளாக இருக்கும் சிறுவர்க மகிழ்ச்சி அடைய வைத்தல், அவர்களுக்கான தேவையான அவசியமான உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், இவ்வருட சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடியில் உள்ள முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலைய சிறுவர்களோடும், முதியோர் இல்ல முதியவர்களோடும் இந்த அமைப்பு ஒரு பொழுதைக் கழித்தது.

ஐகோனிக் யூத்ஸ் அமைப்பின் ஸ்தாபக தலைவர் யூ.எம். தில்ஷானின் ஆலோசனைகக அமைவாக அமைப்பின் நிறைவேற்று நிர்வாக சபை அங்கத்தவர்கள், ஆலோசனை சபை உறுப்பினர்கள், இந்த நிலைய உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோர் ஒரு நாள் பொழுதை சனிக்கிழமை (26) மகிழ்ச்சிகரமாக கழித்தார்கள்.

இவ்வமைப்பினரின் இந்தச் செயற்பாடு ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது. ஐகோனிக் யூத்ஸ் அமைப்பு தொடர்ச்சியாக இந்தச் சமூகத்துக்குப் பல வழிகளிலும் உதவி செய்கின்றது.

காலை வேளையில் சிறார்களுடன் அன்பைப்பரி மாறியவர்கள், பகல் வேளையில், முதியோர் இல்லத்துக்குச் சென்று அவர்களுக்கும் தேவையான பகலுணவை வழங்கி அங்கு அவர்களோடும் பேசி மகிழ்வித்தனர்.












# த.வெ.க. மாநாட்டில் ஒருவர் உயிரிழப்பு; 90 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில்!

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாவது மாநாடு நேற்று மாலை இடம்பெற்றது.

மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்ற அந்த மாநாட்டுக்கு அதிகளவானோர் கலந்துகொண்டனர்.

இந்தநிலையில், மாநாடு நிறைவடைந்த பின்னர் பெரும் திரளானோர் ஒரே நேரத்தில் வெளியேற முற்பட்டதால் அதிக நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது மாநாட்டில் மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

மேலும், அந்த மாநாட்டின்போது மயங்கி விழுந்த 90 இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.



# விஜய் மாநாட்டை ஆர்வமுடன் வீட்டிலிருந்து பார்த்தார் புதுச்சேரியின் முதல்வர் ரங்கசாமி

விஜய் மாநாட்டை ஆர்வமுடன் முதல்வர் ரங்கசாமி தனது வீட்டில் இருந்து பார்த்துள்ளார்.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. இடம்பெற்றுள்ள ஆட்சி நடக்கிறது. இதன் தலைவராக முதல்வர் ரங்கசாமி உள்ளார். அவரது நண்பரான ஆனந்த் மூலம் நடிகர் விஜய்யை ரங்கசாமி ஏற்கெனவே சந்தித்துள்ளார். விஜய் கட்சி தொடங்கியதற்கு அவர் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

விஜய் மாநாட்டு பதாகைகளில் விஜயுடன் முதல்வர் ரங்கசாமி இருக்கும் புகைப்படங்களும் இடம் பெற்றிருந்தன. விருப்பமானவர்கள் தனது புகைப்படத்தை அச்சிடுகின்றனர் என முதல்வர் ரங்கசாமி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி விஜய் மாநாட்டு விவரங்களை கேட்டறிந்தப்படி இருந்தார்.

அத்துடன், விஜய் மாநாடு ஒளிபரப்பை தனது வீட்டில் இருந்து முதல்வர் ரங்கசாமி முழுவதும் பார்த்தார். ஆனந்த் வருகை உள்ளிட்ட விவரங்கள் தொடர்பாக தனது கருத்துகளை தெரிவித்தப்படி முழுவதும் பார்த்துள்ளார்.



# வெட்டிக் கழக தலைவராக நடிகர் விஜய் மாறக்கூடாது

## தமிழக பா.ஜ.க. கருத்து

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், தமிழக அரசியலில் வெட்டிக் கழக தலைவராக மாறக்கூடாது என்று பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ஏ.என். எஸ்.பிரசாத் செய்துள்ளார்.

மேலும் விஜய் அதிகார அரசியலுக்காக தி.மு.க. வழியில், ஓட்டு வங்கி அரசியலுக்காக சீமான் பாதையில் செயல்பட முடிவு செய்து இருப்பது தமிழக மக்களை ஏமாற்றும் விதத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக வெற்றிக் கழக மாநாட்டில் நடிகர் விஜய்யின் வீர வசனங்கள் அடங்கிய உரை ஓர் அரசியல் திரைப் படத்தை பார்ப்பது போல இருந்தது. நடிகர் விஜய்யின் கன்னி பேச்சு என்பதால் இது குறித்து விமர்சனங் களை வைக்க விரும்பவில்லை.

தேர்தல் அரசியலுக்காகவும் ஓட்டு வங்கிக்காகவும் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத வகையில், நாம் தமிழர் கட்சி தலைவர் செபாஸ்டின் சைமனின் மறுஉருவமாக, அரசியல் நடிகர் ஜோசப் விஜய் விளங்குவார் என்பது மட்டும் தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

தமிழக வெற்றிக் கழக மாநாடு பொறுத்தவரை நடிகர் விஜய் தமிழகத்தின் மிகப்பெரிய அரசியல் தலைவராக மாற்ற கட்டமைக்கப்பட்ட விளம்பரம், மாநாட்டு மேடை, என மாநாட்டின் பிரம்மாண்டம் குறித்து காட்டிய அக்கறையை, பெருந் தன்மையுடன் தன்னை நம்பி வந்த தொண்டர்கள் குறித்து முழுமையான அக்கறையுடன் செயல்படவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

வழக்கமாக திரைத்துறையினரைப் பொறுத்தவரை திரைப்படத் தயாரிப்புக்கு 5 கோடி ரூபா, விளம்பரத்துக்கு 15 முதல் 20 கோடி ரூபா என்ன மூன்றில் இருந்து நான்கு மடங்கு விளம்பரத்திற்காக செலவிடுவார்கள். அதே விளம்பர கலாச்சாரத்தில், நடிகர் விஜயும் தன்னைத் தமிழகத்தின் மிகப்பெரிய அரசியல் தலைவராக கட்டமைப்பதிலும் மாநாட்டு பிரம் மாண்டத்திலும், பல கோடி ரூபா செலவு செய்து விளம்பரத்துக்கும், மாநாட்டு ஏற்பாடுகளுக்கும் நிகழ்ச்சியின் வெற்றிக்கும் முக்கியம் கொடுத்து கவனம் செலுத்தினார்.

ஆனால் விஜயை நம்பி வந்த தமிழக வெற்றிக் கழக தொண்டர்கள் நலனுக்காக, குடிநீர் உணவு, கழிவறை, மருத்துவம் என முக்கிய அடிப்படைத் தேவைகளுக்காக போதி அக்கறையுடன் பெருந்தன்மையுடன் மனிதநேயத்துடன், பணத்தை செலவு செய்யாமல் முழுவதுமாக சிக்கனத்தை கடைப்பிடித்து தொண்டர்கள் நலனை புறக்கணித்தது அதிர்ச்சி அளிக்கிறது.

பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் விஜய் அரசியலில் வெற்றி பெற வாழ்த்துக்கள் என தங்களுடைய வாழ்த்துக்களை பதிவு செய்தன. ஆனால், கடந்த தேர்தலில் தி.மு. கவுக்கு வாக்களிக்க, சைக்கிளில் சென்று தி.மு.கவிற்கு மறைமுக ஆதரவு தெரிவித்து, வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களை தி.மு.கவுக்கு ஆதரவாக திசை திருப்பிய நடிகர் விஜய், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மட்டும், நடிகர் விஜய் எனது நீண்ட கால நண்பர், அவரின் புதிய முயற்சிக்கு வாழ்த்துக்கள் என வஞ்சகப்புகழ்சியுடன் வாழ்த்து கூறியதை விஜய் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனக்கு ஜோசப் விஜய் நடிகர் விஜய் ஆக, சினிமாவிற்காக மாறியதற்கு முன்பிருந்தே தெரியும் என்ற அர்த்தத்தில் தன் வாழ்த்தை பதிவு செய்துள்ளார். ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். விஜய் என் நீண்ட கால நண்பர். அவரின் புதிய முயற்சிக்கு வாழ்த்துகள் என்று விஜய் சினிமா தொழிலை விட்டு அரசியல் தொழிலுக்கு வந்திருக்கிறார் என்கிற பாணியில், வாழ்த்து சொல்லி இருப்பதைப் புரிந்து கொண்டு ஊழல் திமுகவின் சூழ்ச்சி அரசியல் மற்றும் நாம் தமிழர் கட்சி பிரிவினைவாத அரசியலில் இருந்து விலகி மக்கள் நல அரசியல் செய்ய வேண்டும். "

– என்று குறிப்பிட்டுள்ளார்.

# பதில் தாக்குதல் நடத்த வேண்டாம் ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதலை நடத்த வேண்டாம் என ஈரானுக்கு அமெரிக்கா தெரிவித்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரான் ஆதரவு பெற்ற பாலஸ்தீனத்தின் காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பு மற்றும் லெபனானின் ஹெஸ்புல்லா இயக்கம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் தாக்குதலில் ஹெஸ்புல்லாவின் தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டதால் கோபமடைந்த ஈரான் கடந்த 1ஆம் திகதி இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது.

இதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

அதன்படி நேற்று முன்தினம் அதிகாலை ஈரான் மீது இஸ்ரேல் நேரடி தாக்குதல் நடத்தியது.

ஈரானின் இராணுவத் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் விமானப்படையின் 100 போர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கியது. இதில் ஏவுகணை, டிரோன் உற்பத்தி ஆலைகள், ஆயுதக் கிடங்குகள், இராணுவ தளங்கள் சேதமடைந்தது.

இஸ்ரேலின் தாக்குதலில் இராணுவ வீரர்கள் 4 பேர் பலியானார்கள் என்றும் இராணுவ தளங்கள் சிறிது சேதங்கள் ஏற்பட்டது என்றும் இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்தது.

இதனால் இரு நாடுகளிலும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஈரான் மீண்டும் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில் ஈரானுக்கு அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதலை நடத்த வேண்டாம் என்றும் அது போன்ற தவற்றைச் செய்ய வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்நாட்டுக்கு உரிமை உள்ளது. இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பதிலளிப்பதில் ஈரான் தவறு செய்யக் கூடாது.

அமெரிக்கப் படைகள் மற்றும் பிராந்தியம் முழுவதும் உள்ள வசதிகளைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.



# ஹிஸ்புல்லா அமைப்பினருடன் நடந்த மோதலில் 5 இஸ்ரேலிய ரிசர்வ் வீரர்கள் கொல்லப்பட்டனர்

தெற்கு லெபனான் கிராமத்தில் சனிக்கிழமை மாலை ஹிஸ்புல்லா அமைப்பினருடன் நடந்த மோதலில் ஐந்து இஸ்ரேலிய ரிசர்வ் வீரர்கள் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்துள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தன.

காயமடைந்த 14 வீரர்களில் 5 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். இந்த துப்பாக்கிச் சண்டையில் மூன்று ஹிஸ்புல்லா இயக்கத்தினர் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் படைத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈரான் ஆதரவு பயங்கரவாதக் குழு நேற்று வடக்கு இஸ்ரேல் மீது அதிகாலை மேற்கொண்ட ட்ரோன் மற்றும் ரொக்கெட் தாக்குதலில் குறைந்தது ஐந்து பேர் காயமடைந்தனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா சுமார் 75 ரொக்கெட்டுகளை வீசியதாகவும், வடக்கு அரபு நகரமான தம்ராவில் மூன்று பேர் காயமடைந்தனர், இதில் ஒரு பெண் படுகாயமடைந்தார் எனவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 28/10/2024

## கடவுச்சீட்டை புதுப்பிக்குமாறு கனடா மக்களுக்கு அறிவுறுத்தல்

கனேடியர்கள் தங்களது விடுமுறை பயணங்களை திட்டமிடும் முன் கடவுச்சீட்டை புதுப்பிக்குமாறு அந்த நாட்டு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

கனேடியர்கள் விடுமுறை 02▶

# கனடிய அரசாங்கத்தின் சார்பில் பழங்குடியினரிடம் மன்னிப்பு கோரினார் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி

**கனடிய அரசாங்கத்தின் சார்பில் பழங்குடியின சமூகத்தினரிடம் பழங்குடியின விவகார அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.**

**ஒன்றாரியோ பழங்குடியின சமூக மக்களின் பணத்தை துஷ்பிரயோகம் செய்தமைக்காக அவர் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.**



சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்த சம்பவத்திற்காக தற்பொழுது அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி மன்னிப்பு கோரியுள்ளார்

1862 ஆம் ஆண்டு பழங்குடியின மக்களின் காணிகளை விற்பனை செய்து கிடைக்கப்பெற்ற பணத்தை அந்த மக்களுக்கு வழங்காது, வேறும் அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், அந்த மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக இவ்வாறு மன்னிப்பு கோரப்பட்டுள்ளதுடன், அந்த மக்களுக்கு தற்பொழுது நட்டஈடு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன

கனடாவில் திருடப்பட்ட பெருந்தொகை பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஆறு பேரை யோர்க் பிராந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர். தங்க ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருள்கள் இந்த நபர்களிட மிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பொருள்களை இழந்தவர்கள் அடையாளத்தை உறுதி செய்து பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். வோகன் பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் இந்த திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




## கடவுச்சீட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்திற்கு தயாராகி வரும் நிலையில், இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதாவது, கோடை விடுமுறைக்கு கனேடியர்கள் பயணத் திட்டங்களை அமைத்துக்கொள்வதை முன்னிட்டு, தங்களின் கடவுச்சீட்டு செல்லுபடியாக உள்ளதா என்பதை சரிபார்க்குமாறு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

சர்வீஸ் கனடா வெளியிட்ட அறிவிப்பில் விடுமுறைகளுக்கு முன் அல்லது பயண நாடுகளின் நுழைவு மற்றும் வெளியேறும் விதிமுறைகளுக்கு ஏற்ப கடவுச்சீட்டு காலத்தை சரிபார்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சில நாடுகளில் குறைந்தபட்ச செல்லுபடியாகும் காலம் அவசியமாக இருக்கும் என்பதால், கடவுச்சீட்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்வது முக்கியம். கடவுச்சீட்டு முதல் முறையாக விண்ணப்பிப்பவர்கள் பயணத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் கடவுச்சீட்டு காலாவதி ஆவதற்கு ஆறு மாதங்கள் முன் புதுப்பிக்க வேண்டும்.

கடவுச்சீட்டு புதுப்பிக்க, தேவையான படிவங்களை நிரப்பி அருகிலுள்ள 'சர்வீஸ் கனடா' அலுவலகத்தில் பதிவு நேரம் முடிவு செய்யலாம் அல்லது பதிவு இல்லாமலும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் நேரடியாக கடவுச்சீட்டு அலுவலகங்களில் அளிக்கப்படும் போது 10 வேலை நாள்களிலும்,




சாதாரண சர்வீஸ் கனடா மையங்கள் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பினால் 20 வேலை நாள்களிலும் செயல்படுத்தப்படும்.

இரண்டு வாரத்திற்குள் பயணிக்க திட்டமிட்டால், அவசர சேவைக்காக கடவுச்சீட்டு அலுவலகத்தைத் தொடர்புகொள்ள வேண்டும். அங்கு பயண சான்றிதழ் மற்றும் கூடுதல் கட்டணங்கள் தேவைப்படும்.

ஐந்து ஆண்டுகளுக்கான கடவுச்சீட்டு 120 கனேடிய டொலர் ஆகும், 10 ஆண்டுகளுக்கானது கனேடிய டொலர் ஆகும். பயணத்துக்கான திட்டம் முன்கூட்டியே செய்யும் போது கடவுச்சீட்டு பெறுவது எளிமையானதாக இருக்கும் என்று குடிமக்கள் சேவைகள் அமைச்சர் டெர்ரி பீச் தெரிவித்துள்ளார்.




# புதிய கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்!

## ரொறன்ரோ மக்களுக்கு அறிவிப்பு

கொவிட் தடுப்பூசி தொடர்பில் ரொறன்ரோ நகர மக்களுக்கு புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

புதிய கோவிட் தடுப்பூசியை இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னதாக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்கள் புதிய தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி பெற்றுக்கொள்ள ரொறன்ரோ சுகாதார அட்டை தேவையில்லை என ரொறன்ரோ பொதுச் சுகாதார அலுவலகம் அறிவித்துள்ளது.

மருந்தகங்கள் உள்ளிட்ட சில இடங்களில் தடுப்பூசி எற்றிக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# ஜோ பைடன் மன்னிப்பு கோருவது மட்டும் போதுமானதல்ல: கனடிய பழங்குடியினர்

அமெரிக்க ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் கனடிய பழங்குடியின சமூகத்தினர் தங்களது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட வதிவிட பள்ளிக்கூட முறைமை தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மன்னிப்பு கோரி இருந்தார்.

இந்த மன்னிப்பு கோரல் நடவடிக்கையானது முதல் கட்டம் மட்டுமே என பழங்குடியின தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பல தலைமுறைகளாக காயப்பட்டு உள்ள சமூகத்தை ஆற்றுப்படுத்துவதற்கான முதல் படியாக இதனை கருதுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்னதாக கனடாவின் அப்போதைய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் பழங்குடியின மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந்தவதிவிடபள்ளிக்கூடங்களுக்காக மன்னிப்பு கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அமெரிக்க ஜனாதிபதி பைடனின் இந்த மன்னிப்பு கோரல் வரவேற்கப்பட வேண்டியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.